
தமிழரசு
அலுவலகப் பிரதி

கலைஞர் அரசின்

60 நாட்களில் அரிய சாதனைகள்



சிறப்பு வெளியீடு எண். 2

தமிழரசு இலவச வெளியீடு

ஜூலை – 2006

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி – மக்கள்தொடர்பு துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
சென்னை – 600 002.

கலைஞர் அரசின்

60 நாட்களில்

அரிய சாதனைகள்

செய்தி - மக்கள் தொடர்புத் துறை

- சென்னை மெரினா கடற்கரையில் அகற்றப்பட்ட தமிழர் பண்பாட்டுச் சின்னம் கண்ணகி சிலை மீண்டும் அதே இடத்தில் நிறுவப்பட்டது.
- சென்னையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு முழு உருவ வெண்கலச் சிலை நிறுவ நடவடிக்கை.
- கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை அருகே, பல்வேறு மொழிகளில், மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் படிகள், ஆய்வு நூல்கள் உள்ளடக்கிய 'திருவள்ளுவர் மையம்' அமைக்க நடவடிக்கை.





- திரைப்பட படப்பிடிப்பு கட்டணங்கள் வெகுவாக குறைப்பு.
- சின்னத்திரை படப்பிடிப்பு கட்டணங்கள், திரைப்பட படப்பிடிப்பு கட்டணத்தில் 50 சத வீதம் குறைப்பு.
- தமிழக அரசு வெளியிடும் ஒப்பந்தப் புள்ளிகள் அரசின் வலைதளத்தில் வெளியிடப்படுகிறது.
- தலைநகரம், மாவட்டங்களில் வெளியிடப் படும் செய்தி வெளியீடுகள் தமிழக அரசின் வலைதளத்தில் வெளியிடப் படுகின்றன.




- கலைவாணர் அரங்கில் மீண்டும் குழந்தைகள் திரைப்பட விழா நடத்திட நடவடிக்கை.
- துறை அலுவலர்களுக்கு கணினி பயிற்சி.

தொழில் துறை

- அமெரிக்க மோட்டரோலா நிறுவனத்துடன் இணைந்து திருப்பெரும்புதூரில் ரூ. 135 கோடி மதிப்பில் மொபைல் போன் தொழிற்சாலை நிறுவப் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- சென்னையிலிருந்து திருச்சி மற்றும் மதுரைக்கு ரூ. 409 கோடி முதலீட்டில் பெட்ரோலியப் பொருட்களை குழாய் மூலம் எடுத்துச் செல்லும் திட்டம் தொடக்கம்.




தமிழரசு அலுவலகப் பிரதி



- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் 124 நபர்களுக்கு தொழில் தொடங்க ரூ.48.37 கோடி கடன் அனுமதி.
- சிவகங்கை கிராஃபைட் சுத்திகரிப்பு ஆலை மற்றும் அம்பத்தூர் வெர்மிகுலைட் தாதுப் பிரிவு ஆகியவை 60 நாட்களில் முறையே ரூ.178.09 லட்சம், ரூ. 12.21 லட்சம் விற்பனை செய்து சாதனை. இது கடந்த ஆண்டு (2005) விற்பனையை விட அதிகம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை



- மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 10, 12 ஆம் வகுப்பு ஆதிதிராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ-மாணவி யருக்கு ஊக்கப்பரிசுகள்.


- சேலம் மாவட்டத்தில் ரூ. 1 கோடி மதிப்பில் ஏகலைவா மாதிரி மேல்நிலைப் பள்ளி அமைக்க ஆணை.

சமூகநலத்துறை

- சத்துணவு உண்ணும் மாணவ-மாணவியருக்கு வாரம் இரண்டு நாட்கள் முட்டை வழங்கும் திட்டம் தொடக்கம்.



- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் மீண்டும் அமலாக்கம். நிதியுதவி ரூ.10,000 லிருந்து ரூ. 15,000 ஆக உயர்வு.



வேளாண்மைத் துறை

- ரூ.53.69 கோடி மதிப்பில் பேரியல் மேலாண்மைத் திட்டங்கள்.
- ரூ.22.30 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த எண்ணெய்வித்து, பயறு, எண்ணெய்ப் பனை மற்றும் மக்காச்சோள சாகுபடித் திட்டம்.
- ரூ. 2.59 கோடி மதிப்பில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டம்.
- சாகுபடி கடன்கள் வழங்க போதுமான நிதி ஒதுக்கீடு.
- மேட்டூர் அணை ஜூன் 12 ஆம் தேதி திறப்பு.




கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

- அரிசி குடும்ப அட்டை பெற்றுள்ள அனைத்து குடும்பத் தினருக்கும் கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய்க்கு அரிசி.



- மாநில அரசு கோரிக்கைக்கு இணங்க புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்க மத்திய அரசு 12,000 கிலோ லிட்டர் சிறப்பு ஒதுக்கீடு.

- அனைத்து விவசாயிகளுக்கும் கூட்டுறவுக் கடன் நிலுவைத்தொகை முழுமையாகத் தள்ளுபடி. ரூ. 11,25,729 கடனுக்கான தள்ளுபடி சான்றுகள் விநியோகம்.



- விவசாயி களுக்கு ரூ. 153.65 கோடி குறுகிய காலக் கடன் வழங்கப் பட்டுள்ளது.

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை

- வேலை வாய்ப்பகங்களில் 2005 ஆம் ஆண்டில் பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் புதுப்பிக்க சிறப்புச் சலுகை.




பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை




- வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஊதியம் இல்லா விடுப்பாக அறிவிக்கப் பட்டிருந்த நாட்களை பணிக்காலமாக முறைப்படுத்தி ஆணை.
- அரசுப் பணிகளுக்கு ஆதரவற்ற விதவை களைக் கண்டறிய மாதாந்திர வருமானம் ரூ.1,000 லிருந்து ரூ. 4,000 ஆக உயர்த்தி ஆணை.

திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

- 2006 - 2007 ஆம் ஆண்டு தமிழக திட்டப்பணிகளுக்கு மத்திய அரசு கடந்த ஆண்டை விட 37.36 சதவீதம் அதிகமாக ரூ.12,500 கோடி ஒதுக்கிட ஒப்புதல்.
- மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 35.50 கோடி ஒதுக்கீடு. இது முந்தைய ஆண்டின் ஒதுக்கீட்டை விட 60.63 சதவீதம் அதிகம்.
- மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.17.04 கோடி ஒதுக்கீடு. இது முந்தைய ஆண்டின் ஒதுக்கீட்டை விட 55.05 சதவீதம் அதிகம்.




மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை



- தமிழகத்தில் எத்தனால் கலந்த பெட்ரோல் வழங்க 4.4 கோடி லிட்டர் எத்தனாலை நான்கு எண்ணெய் நிறுவனங்களுக்கு கூடுதலாக வழங்க நடவடிக்கை.
- மணல் கொள்ளையைத் தடுக்க குற்றவாளிகளுக்கு குண்டர் சட்டத்தின் கீழ் ஓராண்டு தண்டனை.


போக்குவரத்துத் துறை



- ரூ.100 கோடி அரசு நிதியுதவியுடன் 1,000 புதிய பேருந்துகள் வாங்க முடிவு.
- தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் சுய நிதியுதவியுடன் மேலும் 1,000 புதிய பேருந்துகள் வாங்கி இயக்கவும் நடவடிக்கை.

எரிசக்தித் துறை


- புதுப்பிக்கத் தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலம் 48 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தி.
- 12 கிராமங்களின் 150 தொலைதூர குடியிருப்புகளுக்கு சூரிய தெரு விளக்குகள், சூரிய வீட்டு விளக்குகள் மூலம் மின் வசதி ஏற்படுத்தித்தரும் பணிகளில் முன்னேற்றம்.
- வழுதூரில் 95 மெகாவாட் விரிவாக்கத் திட்டப் பணிகள் தொடக்கம்.
- இலவச விவசாய மின் இணைப்புகள் இலக்கு 5,000 லிருந்து 10,000 ஆக உயர்வு.




தகவல் தொழில்நுட்பத் துறை

- 15.9.2006 அன்று, பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 30,000 பேர்களுக்கு வழங்க அரசாணை.

- தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மூலம் பட்ட வகுப்பு மற்றும் மேற்பட்டய இணைய வழித்தேர்வு நடத்தப்பட்டது. பட்ட வகுப்பிற்குரிய 42 உயர் கல்விப் பாடங்கள் இணையதளத்திலிடப் பட்டன. முத்துப்பாட்டன் கதை, கலித்தொகை மின் நூலகத்தில் இடம் பெற்றது.



பொதுப்பணித் துறை



- மணல் குவாரிகளின் செயல்பாட்டை சீர்செய்ய அரசாணை.
- நொய்யல் ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கப் பணிகளுக்கு ஒரு கோடியே 43 லட்சம் ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல்.
- நொய்யல் ஆற்றில் ஆக்கிரமிப்புகள் 12 கி.மீ. தூரத்திற்கு அகற்றம்.
- காவிரி டெல்டா மாவட்டங்களில் ரூ.10 கோடி செலவில் தூர் வாரும் பணிகள்.

ஊரக வளர்ச்சித் துறை




- 12,618 மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் பணி நியமன உத்தரவு.
- ஊராட்சி ஒன்றியங்களில் 933 பொருத்துநர்கள், இரவுக் காவலர் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு நிரந்தர வேலை.
- பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில், அரசின் முதல் பங்குத் தொகையாக ரூ.8.67 கோடி விடுவிப்பு.
- கிராம சுய வேலைவாய்ப்புத் திட்ட விற்பனை வளாகங்கள் "பூமாலை விற்பனை வளாகங்கள்" எனப் பெயர் மாற்றம்.

சிறப்பு சிற்றூராட்சிகள் துறை

- தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றிய 2,923 பணியாளர்கள் காலமுறை ஊதியம் பெற ஆணை.

- கன்னியாகுமரி மாவட்டம், ஆரல் வாய்மொழி சிறப்பு சிற்றூராட்சியில் ரூ.1 கோடியில் காற்றாலை அமைக்க நிருவாக அனுமதி வழங்க நடவடிக்கை.



நீதித் துறை

ஓய்வூதிய இயக்ககம்

- தமிழ்நாடு அரசு ஓய்வூதிய மருத்துவ நலத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மருத்துவ நிதி உதவியாக ரூ.1.35 கோடி வழங்கப் பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களின் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தில் ரூ. 4.7 கோடி ஒப்பளிப்பு.

சிறுசேமிப்புத் திட்டம்


- சிறுசேமிப்பில் ரூ.1563.29 கோடி மொத்த வசூல் - ரூ.487.36 கோடி நிகர வசூல்.



பள்ளிக் கல்வித் துறை


- ஜூலை 15ஆம் நாள், பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து, அனைத்துப் பள்ளி களிலும் விழாக்கள் நடத்த உத்தரவு.
- ஒன்றாம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை, படிப்படியாக தமிழ் கட்டாயப் பாடமாக அமல்.
- அரசுப் பள்ளிகளில், தொகுப்பு ஊதியம் பெறும் ஆசிரியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க உத்தரவு.
- காலியாக உள்ள 8,468 ஆசிரியர் பணி இடங்களை காலமுறை ஊதியத்தில் நிரப்ப உத்தரவு.
- 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளி களாகவும், 100 உயர் நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளி களாகவும் தரம் உயர்வு.






- தமிழ் வழியில் கற்பிக்கும், அரசு மானியம் பெறாத பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 1,28,514 மாணவ-மாணவியருக்கு ரூ.94.80 லட்சம் மதிப்பில் இலவசப் பாடநூல்கள் வழங்க உத்தரவு.
- எழுத்தறிவு விழுக்காட்டில் பின் தங்கியுள்ள மாவட்டங்களில் 200 பள்ளிகளைக் கண்டறிந்து சிறப்பு வகுப்புகள் நடத்த நடவடிக்கை
- பொது நூலகங்களுக்கு வழங்கப்படும் தமிழ் நூல்களின் எண்ணிக்கையை 750 படிகளிலிருந்து 1000 படிகளாக உயர்த்தி ஆணை.
- அரசுப் பள்ளிகளில் கட்டடம் கட்ட நன்கொடை அளித்தவரின் பெயரை அக்கட்டடத்திற்கு சூட்ட அரசு ஆணை.

- அரசு ஊழியர்களைப் பணி நீக்கம் செய்வதற்காக கொண்டுவரப்பட்ட எஸ்மா சட்டத்தை ரத்து செய்து உத்தரவு.
- கட்டாய மதமாற்றத் தடுப்புச் சட்டம் முறைப்படி ரத்து செய்து உத்தரவு.



சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை




- ஜூன் மாதம் 1,000 கிராமங்களில் 83 மரக்கன்றுகள் வீதம் 83,000 மரக் கன்றுகள் நடவு.
- 40 பழங்குடி யின கிராமங்களை உள்ளடக்கிய 205 கிராமங்களில் காடு வளர்ப்புத் திட்டம் முழு நோக்குடன் செயல்படுத்த ஆணை. 40 சதம் முன் பணத்தொகை விடுவித்து நடவடிக்கை.
- மரம் வளர்ப்பு தொடர்பாக விழிப் புணர்வை ஏற்படுத்த புதிதாக 4 வன விரிவாக்க மையங்கள்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை

- நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் எண்ணிக்கை 3,05,800 ஆக உயர்வு.
- அனைத்து முதன்மைப் பல்கலைக் கழகங்களுக்கும் தலா ஒரு லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.



- மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டம் மற்றும் கைத்தறி நெசவாளர் களுக்கான நலவாழ்வு காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றில் கூட்டுறவு அமைப்பில் இல்லாத தனி ார் கைத்தறி நெசவாளர் களுக்கும் கோர ஆணை.



சிறு தொழில் துறை




- 3,116 சிறுதொழில் அலகுகள் (SSI) பதிவு.
- 1,533 குடிசைத் தொழில் அலகுகள் பதிவு.
- 875 கைவினை அலகுகள் பதிவு.

தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

- புலவர் குழந்தை அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவரது மரபுரிமையருக்கு ரூ. 10 லட்சம் வழங்கப் பட்டது.
- தலைநகரம் காத்த தமிழ்ச்செம்மல் ம.பொ.சி. அவர்களின் நூல்கள் நாட்டுடை மையாக்கப்பட்டு, அவரது மரபுரிமை யருக்கு ரூ. 20 லட்சம் வழங்கப்பட்டது.
- 5,150 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி ரூ. 500 லிருந்து ரூ. 1,000 ஆக உயர்த்தி ஆணை.



இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை




- சாதி வேறுபாடின்றி அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக நியமனம் செய்ய ஆணை.
- திருக்கோயில்களில் பரிவட்டம் கட்டும் மரியாதை முறையை ரத்து செய்து ஆணை.
- 198 திருக்கோயில்களில் குடமுழுக்கு.

தொல்லியல் துறை

- காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய 8 மாவட்டங்களில் 536 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன.
- சைம்பியன் கண்டியூரில் (மயிலாடுதுறை) தமிழகத்திற்கும், சிந்துவெளிக்கும் இடையிலான தொடர்பு குறித்த சிந்துவெளிக் குறியீடுகள் உள்ள புதிய கற்காலக் கருவி பற்றிய களஆய்வு - கண்டுபிடிப்பு குறித்து கல்வெட்டுச் சிறப்பிதழ் வெளியீடு.



நெடுஞ்சாலைத் துறை



- 2006-2007ஆம் நிதியாண்டில், சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கும் திட்டப் பணிகளுக்காக ரூ.2,650 கோடி ஒதுக்கீடு செய்து, இதுவரை ரூ. 315 கோடி செலவில் 8 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தமிழரசு
அலுவலகப் பிரத

பத்திரப் பதிவுத் துறை

- 3,71,080 ஆவணங்கள் பதிவு செய்யப் பட்டு ரூ. 720.18 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.
- ஆள்மாறாட்டம் செய்து, போலி ஆவணப் பதிவுகள் செய்வதைத் தடுக்க, ஆவணங்கள் பதிவின்போது புகைப் படங்கள் ஒட்டும் திட்டம் அறிமுகம்.






- வணிகவரித் துறையில் ரூ. 3,090.47 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. இவ்வருவாய் சென்ற ஆண்டு இதே கால கட்டத்தில் வசூல் செய்த வருவாயை விட 21.86 சதவிகிதம் அதிகம்.

உயர் கல்வித் துறை

- 2007-2008 ஆம் கல்வி ஆண்டு முதல் தொழில் நுட்பக் கல்வி நுழைவுத் தேர்வினை ரத்து செய்ய ஆய்வுக் குழு அமைத்து உத்தரவு.
- மாணவர்களின் நலன் கருதி தொழில்நுட்பக் கல்வி பயில சிறுபான்மை அல்லாத சுயநிதிக் கல்லூரிகளிலும் இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்ற மசோதா நிறைவேற்றம்.
- சிறுபான்மை அல்லாத சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 65% இடங்களும், சிறுபான்மை சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 50% இடங்களும் மாணவர்கள் சேர்க்கைக்கு வழிவகை






செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 13,205க்கும் அதிகமான மாணவர்கள் பயனடைவார்கள்.


- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,000 விரிவுரையாளர்களை, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் முறையான ஊதிய விகிதத்தில் நியமிக்க உத்தரவு. இதில் 20 கண் பார்வையற்ற மற்றும் உடல் ஊனமுற்ற விரிவுரையாளர்களை நியமிக்க ஆணை.
- அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 600 விரிவுரையாளர்களை, பல்கலைக் கழக மானியக்குழுவின் கல்வித் தகுதி மற்றும் இட ஒதுக்கீடு அடிப்படையில் முறையான ஊதிய விகிதத்தில் நியமிக்க ஆணை.
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு.

சென்னை மாநகராட்சி

- வருவாய்த் துறையின் மூலம் வசூல் செய்த சொத்துவரி ரூ. 33.79 கோடி. இத்தொகை சென்ற ஆண்டில் இதே நாட்களில் வசூல் செய்ததை விட ரூ. 12.54 கோடி அதிகம்.
- மாநகராட்சிக்கு ரூ. 1.60 கோடி செலவில் புதிய கட்டடங்கள்.
- மாநகராட்சி மழைநீர் வடிகால்துறையின் மூலம் ரூ. 3.97 கோடி மதிப்பீட்டில் 30 பணிகள்.
- துப்புரவுப் பணிக்காக ரூ. 34.50 லட்சம் மதிப்பீட்டில், குப்பை லாரிகள் வாங்கப்பட்டன.
- மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் பயன்பெற ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கணினிகள், ரூ.21.18 லட்சம் மதிப்பீட்டில் விளையாட்டுப் பொருட்கள், ரூ. 35 லட்சம் மதிப்பீட்டில் அறிவியல் ஆய்வுக் கூட சாதனங்கள் வாங்க உத்தரவு.




மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை



- 1,400 மருத்துவ அலுவலர்கள், அரசு மருத்துவமனைகளில் நியமனம்.
- 1,800 செவிலியர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நியமனம்.
- இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் இருந்த, தேனி அரசு மருத்துவக் கல்லூரி தொடங்க இந்திய மருத்துவக் கழகம், மத்திய அரசு அனுமதி பெறப்பட்டது.

கால்நடை பராமரிப்புத் துறை



- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் முதன் முறையாக உணவு பதனிடும் தொழில் நுட்பவியலில் இளங்கலை பட்டப்படிப்பு புதிதாக அறிமுகம்.


- ஆவின் வரலாற்றில் முதன் முறையாக 26.6.2006 அன்று, அதிக அளவாக 25.37 லட்சம் லிட்டர் பால், ஒன்றியங்கள் மூலம் கொள்முதல் செய்து சாதனை.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

- சுனாமியால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு வட சென்னை பகுதியில் ரூ.81 கோடி மதிப்பீட்டில் 5,400 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்ட 13.69 ஹெக்டேர் நிலம் குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலக்கிரயமின்றி வழங்கப்பட்டுள்ளது.

- சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்சென்னை பகுதி குடிசைவாழ் மக்களுக்கு, சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் ரூ.81.81 கோடி மதிப்பீட்டில் 5,454 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட 7.95 ஹெக்டேர் அரசு நிலம் நிலக்கிரயமின்றி ஒப்படைப்பு.

- 30 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு பழுதடைந்த குடிசைமாற்று வாரிய 2,862 அடுக்குமாடிக் குடியிருப்புகளை அகற்றி, அவ்விடங்களில் சுனாமியால் பாதிக்கப் பட்ட 4,458 குடும்பங்களுக்கும், முன்னர் அவ்விடத்தில் வசித்த 2,862 குடும்பங்களுக்கும், மொத்தம் 7,320 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.128.10 கோடி மதிப்பீட்டில் கட்ட நடவடிக்கை.



- நகரக் குடிசைப் பகுதிகளில் வாழும் 7,000 குடும்பங்களுக்கு ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கை.

நகர ஊரமைப்பு இயக்ககம்



- கடற்கரையோரப் பகுதிகளில் பாதிக்கப் பட்டுள்ள மனைப்பிரிவுகளுக்கு மாவட்ட ஆட்சியரிடம் உரிய அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை யோடு, அனைத்து சுனாமி மனைப் பிரிவு களுக்கும் சிறப்பு இனமாக பொதுவான விலக்களித்தும், அரசுக்குச் செலுத்த வேண்டிய நன்னிலை வரி வசூலிப்பதி லிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

